NOOLAHAM FOUNDATION

**நூலக நிறுவன**

**மாதாந்த அறிக்கை – 2016 செப்ரெம்பர்**

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 செம்ரெம்பர் மாத ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 1758 | 22811 |
| கையெழுத்துப் பிரதி | 03 | 82 |
| பத்திரிகை நறுக்குகள் | 25 | 1318 |
| பக்கம் சிதைந்தவை | 21 | 230 |
| மேம்படுத்தல்கள் | 17 | 534 |
| மொத்தம் | 1824 | 24975 |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 569 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதோடு 17 தரமேம்படுத்தல் ஆவணங்களும் வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டன. மிகுதி ஆவணங்கள் ஒக்டோபர் மாத முதல் வாரத்தில் பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவற்காக முன்னெடுக்கப்படும் அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 50 இதழ்களுக்களிற்கும் 20பத்திரிகைகளிற்குமான அறிமுகக் குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் ஆசிரியர்கள் சுந்தரம்பிள்ளை, செங்கை ஆழியான், குகநேந்திரன், செந்திவேள் ஆகியோரின் சேகரிப்புக்களும் சன்மார்க்க சபை சேகரிப்புக்களும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. வெளியீடுகளை பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

செப்ரெம்பர் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

- வெளியீட்டாளர்கள்
    - புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி
        - பாட்டாளி
        - செம்பதாகை
        - தொழிலாளி
        - புதிய பூமி
        - புதிய நீதி

- எழுத்தாளர்கள்
    - பொன்.இராமநாதன்
    - வ.ஜீவகுமரன்

**வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்**

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் 873 பதிவுகள் மேலதிக தகவல்களுடன் இற்றைப்படுத்தப்பட்டன.

**வரவு செலவு அறிக்கை**

- செப்ரெம்பர் மாதத் தேவைகளுக்காக ரூ. 500,000.00 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 277,500.00 உம் ஆவணங்களை சேகரிப்பதற்கான வன் தட்டுக்கள் ரூ. 151,500.00 உம் வாடகை, தொலைபேசி,

இணையம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.

- அவுஸ்திரேலியா அன்பர்களிடமிருந்து ரூ. 110,000.00, ஐக்கிய இராச்சியம் அன்பர்கள் ஊடாக ரூ. 384,000.00, கனடா அன்பர்கள் ஊடாக ரூ. 100,020.00, இலங்கை அன்பர்களூடாக ரூ. 11,000.00 ம் நன்கொடையாக இம்மாதம் கிடைக்கப்பெற்றது.

- இயக்குனர்களில் ஒருவரான திரு. தி. கோபிநாத் (அவுஸ்திரேலியா) அவர்களூடாக வன் தட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக ரூ. 151,500.00 நன்கொடைகள் கிடைக்கப் பெற்றன.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.